2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 61, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு உணவு அமைச்சர்.

61.-

சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை மீது குடும்ப அட்டை வழங்குதல்

***21571*—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு :**

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தும், குடும்ப அட்டை வழங்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பரிந்துரை செய்து வரப்பெறும் மனுக்கள் மீது உரிய விசாரணைக்குப்பின் தகுதியின் அடிப்படையில் புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) எனவே, இக்கேள்வி எழாது.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களுடைய கோரிக்கைகளைக் கேட்கிறபோது, பொதுமக்கள் நேரடியாகச் சட்டமன்ற உறுப்பினர்களை அணுகுகிறபோது எங்களுக்குக் குடும்ப அட்டை வழங்குவதில்லை என்ற கோரிக்கையை வைக்கிறார்கள். அதன் அடிப்படையில் நாங்கள் கையொப்பம் அளித்து வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு அனுப்புகிறபோது அவர்கள், எங்களுடைய அந்த கையொப்பமிட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது என்று சொல்லி அனுப்பிவிடுவதாகப் பல்வேறு புகார்கள் எங்களுக்கு வந்துள்ளன. எனவே மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் தற்போதைய, நிரந்தர தமிழகத்தின் முதலமைச்சர், புனிதத் தாய், பொன்மாதா, புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் பல்வேறு புரட்சிகளையும், புதுமைகளையும் செய்து ஏழை எளியவர்களுக்கு அல்லும் பகலும் உழைத்து வருகிற இந்த நல்லாட்சியில் இப்படிப்பட்ட ஒரு குறையைப் போக்குவதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 22]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டை என்பது சட்டப்படியாக வழங்கப்படுகிற ஒரு ஆவணம் ஆகும். உணவுப் பொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு மாத்திரம் அந்தக் குடும்ப அட்டைகள் உபயோகப்படுத்தப்படுவதில்லை. இன்றைக்கு எந்தத் துறைக்குச் சென்றாலும், அவர் தமிழ்நாட்டில் வாழ்கிற குடிமகன் என்பதற்கு சான்றாக, சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுகிற ஒரு ஆவணமாக இந்தக் குடும்ப அட்டை விளங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே இதிலே மிகுந்த எச்சரிக்கையோடும், பொறுப்புணர்ச்சியோடும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படுகிற சூழ்நிலை சென்ற ஆண்டு ஏற்பட்டபோது மிகப் பெரிய அளவில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்ததை ஒட்டி சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால் அதை உடனடியாக ஏற்று குடும்ப அட்டைகள் வழங்கலாம் என்று 1992 ஆம் ஆண்டில் முதலில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல சிக்கல்கள் எழுந்தபோது அதைப் பரிசீலித்ததற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டு இருக்கிறது. அதிலேயும் பல சிக்கல்கள் எழுந்ததற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால் முன்னுரிமை வழங்கி அதைப் பரிசீலித்து வழங்கவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பொதுவாக இந்த குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படுவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கை களுக்குப் பிறகு ஒரு கோடியே 23 இலட்சம் அட்டைகள் முதலிலே புதுப்பிக்கப்பட்டன. மொத்தம் 1 கோடியே, 23 இலட்சத்து 15 ஆயிரம் அட்டைகள், ஆனால் அதற்குப் பிறகு சுமார் 41 இலட்சத்திற்கும் அதிகமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. இவ்வளவு அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டதற்குப் பிறகு மிகுந்த எச்சரிக்கையோடு அரசு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின்படி, மிகத் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து சுமார் 27 இலட்சத்திற்கும் அதிகமாக அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. ஆகவே இப்போது அந்த பிரச்சினைகள் எழவில்லை என்றாலும் எந்த நேரத்திலேயும் மக்களுடைய பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள் முறையாகப் பரிந்துரை செய்து அந்த மனுக்களிலே எல்லா விவரங்களையும் தந்து அவர்கள் அனுப்புவார்களேயானால் அதைப் பற்றி பரிசீலித்து பரிந்துரைகளை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அரசு தெளிவாக அறிவித்திருக்கிறது.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கே.எம். கலைச்செல்வி.

திருமதி கே.எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் மீது விசாரணை

நடந்து முடிந்த பின்பும், 6 மாதம் அல்லது 10 மாதம் கடந்த பிறகும், அவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படுவதில்லை. அதற்கு என்று காலவரையறை வகுத்து இத்தனை மாதத்திற்குள் குடும்ப அட்டை வழங்கவேண்டுமென்று காலவரையறை நிர்ணயிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு தெரிவித்ததைப் போன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்னாலே இருந்த நிலையைக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு தொடக்கத்திலேயிருந்துதான் இந்த பிரச்சினைகள் எழுந்தன. சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதியோடு முடிவடைந்த காலத்தோடு விண்ணப்பங்கள் பெறப்பட்டு நிறுத்தப்பட்டன. அதற்குப் பிறகும் விண்ணப்பங்கள் வந்துகொண்டிருந்த சூழ்நிலையில் அக்டோபர் மாதம் வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அப்படி 41 இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்ட போது, ஒரு கோடியே 23 இலட்சத்திற்கும் அதிகமான அட்டைகள் வழங்கப்பட்டும் மீண்டும் 41 இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் வரப்பெற்ற சூழ்நிலையில் எல்லாவற்றையும் பரிசீலிப்பதற்கு எடுத்துக் கொண்ட அந்த கால அவகாசத்திலேதான் பலரால் தங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படவில்லை என்ற புகார்கள் எழுப்பப்பட்டன. அதையெல்லாம் தீவிரமாக பரிசீலித்து மிகப் பெரிய அளவிலே ஆய்வாளர்களை, அலுவலர்களை எல்லாம் அதிலே மீண்டும் மீண்டும் பரிசீலிக்கச் சொல்லி, இப்போது ஏறத்தாழ 27 இலட்சத்திற்கு அதிகமான அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டு இப்போது அந்த அளவுக்கு எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டாவது துணைக் கேள்வி. திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் தெரிவிக்கின்றபோது குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன, இனிமேல் கேள்வி எழாது என்று தெரிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே நாங்கள் தொகுதியிலே சுற்றுபயணம் வருகிறபோது பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உண்மையான குடும்ப அட்டை இன்னும் வழங்கப்படாமல் நிலுவையிலே உள்ளது. அவ்வாறு நிலுவையிலே உள்ள குடும்பங்களுக்காவது உரிய நடவடிக்கை எடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் நியாயமான கோரிக்கையின் மீது பரிந்துரை செய்கிறபோது காலவரையறை நிர்ணயித்து அந்த நியாயமான அட்டைகள் வழங்குவதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்

1994 மார்ச் 22]

அவர்களே, இந்த குடும்ப அட்டைகள் வழங்குவது என்பது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஒரு நிகழ்ச்சியாகும். நடைபெறவேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். ஏனென்றால் புதிதாக கல்யாணங்கள் நடைபெறுகின்றன. வயது வந்தவர்கள் எல்லாம் தனியாக குடும்பங்கள் வைத்துக்கொள்கிறார்கள். இடம் விட்டு இடம் மாறுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் புதிய குடும்ப அட்டைகள் அல்லது இருக்கின்ற குடும்ப அட்டைகளை மாற்றுகிற அந்த சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டுக்கொண்டேதான் இருக்கும். இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு நிர்வாக முறையாகும். ஆகவே நான் இங்கே குறிப்பிட்டது மிக அதிக அளவிலே ஒரு 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த அந்த அடிப்படை பட்டியலை வைத்துக்கொண்டு 1982-ஆம் ஆண்டு பட்டியலை வைத்துக்கொண்டு 1992-ஆம் ஆண்டிலே இந்த குடும்ப அட்டைகளை எல்லாம் புதுப்பித்ததனாலேதான் பலருக்கு அந்த குடும்ப அட்டைகள் கிடைக்கவில்லை அல்லது பலர் குடும்ப அட்டைகள் இல்லாமல் இருக்கிறோம் என்கின்ற அந்த குறைபாடுகள் எல்லாம் எழுப்பப்பட்டன. ஆகவே தான் சென்ற ஆண்டு முழுவதும் இதிலே மிக அதிகமான கவனம் செலுத்தவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. ஆகவே அந்த சூழ்நிலையிலே ஏற்பட்ட சிக்கலைத்தான் நான் இங்கே விளக்கினேன். இப்பொழுது தொடர்ந்து சீராக, வழக்கமாக நடைபெறுகிற அந்த குடும்ப அட்டைகள் பெறுகிற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே வேண்டுகோள் வருகிறபொழுது, கோரிக்கை வருகிறபொழுது, நான் உங்கள் மூலம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். குடும்ப அட்டைகள் கேட்டு வருகிறவர்கள் தகுந்த, நியாயமான, நம்பிக்கையின் அடிப்படையிலே வருகிறார்களா, அவர்கள் சொல்கிற விவரங்கள் எல்லாம் சரியானவை தானா, என்பதை எல்லாம் தயவுசெய்து ஒரு இரண்டு நிமிடங்கள் அதற்காக ஒதுக்கி, விசாரித்து, பரிசீலித்து, அதற்குப் பிறகு தங்களுடைய பரிந்துரைகளை வழங்க வேண்டுமென்று நான் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

அப்படி இனிமேல் வருகிற விண்ணப்பங்கள் இப்பொழுதும், எப்பொழுதும் அதற்குரிய மரியாதை வழங்கி அரசு அலுவலர்களாலே தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஏனென்றால், ஒரு குடும்ப அட்டை வழங்குகிறபொழுது, நான் முதலிலேயே அதைத்தான் குறிப்பிட்டேன். வெறும் அரிசி வாங்குவதற்கு, சர்க்கரை வாங்குவதற்கு, மண்ணெண்ணெய் வாங்குவதற்கு மாத்திரம் குடும்ப அட்டைகள் அல்ல. இன்றைக்கு தமிழ்நாட்டிலே, இங்கே வாழ்கிற ஒரு குடிமகன் என்று நிருபிக்கப்பட வேண்டுமானால் அதற்கு குடும்ப அட்டை தான் முதலில்

[1994 மார்ச் 22

ஆவணமாக பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, யாராவது நம்மை ஏமாற்றி, தமிழ்நாட்டுக்குள் நுழைந்துகொண்டவர்கள் பாஸ்போர்ட் வாங்குவதற்கும் இந்த குடும்ப அட்டையைத் தான் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடும்ப அட்டைகளினுடைய முக்கியத்துவத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இந்த குடும்ப அட்டை இருந்தால்தான் கடன் வாங்க முடியும். குடும்ப அட்டை இருந்தால்தான் மின்சார இணைப்பு பெற முடியும். இந்த சூழ்நிலையிலே இப்பொழுது, இந்த 2, 3 மாதங்களாகவே நானே 18 ஆயிரம் பேர்களுக்கு குடும்ப அட்டை இல்லை, அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எங்களுக்கு 4 ஆயிரம் அட்டைகள்தான் வந்தன. அதைத்தான் விநியோகம் செய்து இருக்கின்றோம், மேற்கொண்டு அவர்களுக்கு அட்டைகள் வரவில்லை என்று சொல்கிறார்களே, ஆகையினாலே இந்த குடும்ப அட்டை களினுடைய அவசியத்தை உணர்ந்து, எங்கெங்கு எல்லாம் இந்த குடும்ப அட்டைகள் பற்றாக்குறை இருக்கின்றதோ, எந்தெந்த குடும்பத்திற்கு இன்னும் கிடைக்காமல் இருக்கின்றதோ, அவர்களுக்கு எல்லாம் உடனடியாக வழங்குவதற்கான ஒரு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் இல்லை என்ற குறைபாட்டினாலே எந்த இடத்திலும் குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் நிறுத்தப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கூறுகிற அந்த நிகழ்ச்சிகள், சில மாதங்களுக்கு முன்னாலே யாராவது தெரிவித்திருக்கக் கூடும். அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். 41 இலட்சத்திற்கு மேற்பட்ட மனுக்கள் வந்து குவிந்துவிட்ட சூழ்நிலையில் இதை எல்லா வீடுகளிலேயும் சென்று விசாரிக்க வேண்டிய அந்த கட்டாயத்திற்கு அலுவலர்கள் ஆட்பட்ட சூழ்நிலையில், அதற்குரிய அலுவலர்கள் இல்லாத ஒரு சூழ்நிலையில், கொஞ்சம் தாமதம் ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு, வேறு துறைகளிலே இருக்கிற அலுவலர்களை எல்லாம் இதிலே ஈடுபட செய்து, அந்த விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்று துரிதப்படுத்தி, இன்றைக்கு அக்டோபர் மாதம் முடிகிறதுவரை வந்திருக்கிற விண்ணப்பங்களைத் தான் நான் இங்கே கணக்கிலே சொன்னேன். ஏறத்தாழ 27 இலட்சத்திற்கும் அதிகமான கார்டுகள் வழங்கப்பட்டுவிட்டன.

1994 மார்ச் 22]

13 லட்சத்து 86 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அடிப்படை காரணங்களை எல்லாம் ஆராய்ந்ததற்குப் பிறகு, அதைத் தவிர, அட்டைகள் இல்லை என்று எப்பொழுதோ, முன்னாலே யாராவது சொல்லியிருப்பார்கள். அப்படி இல்லையென்று யாராவது சொன்னால் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அந்த அதிகாரி தவறான தகவலை தந்து கொண்டிருக்கிறார் என்று பொருள். அப்படி அட்டை இல்லாததனாலே எந்த இடத்திலேயும் குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் நிறுத்தப்படவில்லை. சரியான காரணங்கள் அவர்கள் விளக்கப்படாத ஒரு சூழ்நிலையில், நிராகரிக்கப்பட்டிருக்கலாமே தவிர, அது அட்டை இல்லை என்பதனாலே எந்த இடத்திலேயும் அது நிராகரிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன காரணங்களை எல்லாம் வைத்துத் தான் நானும் பரிந்துரை செய்தேன். நான் கொடுத்த பரிந்துரைகளிலே ஒரு சதவிகிதம்கூட கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு வியாபார ஸ்தலங்களில் எல்லாம் ஒரு போர்டை வைத்திருப்பார்கள். அதிலே . இன்று ரொக்கம், நாளை கடன்' என்று இருக்கும். அது என்றைக்குமே. அந்த போர்டு தொங்கிக் கொண்டிருக்கும். அதுபோல, இன்றைக்கு தனி தாசில்தார் அலுவலகங்களிலே இந்த மாத இறுதிக்குள் குடும்ப அட்டை அனைத்தும் வழங்கப்படும் என்று போர்டு வைத்திருக்கிறார்கள். அது எந்த மாத இறுதிக்குள் என்று அமைச்சர் சொல்லுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற கோவை மாவட்டத்திலேதான் இந்தப் பிரச்சினை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலேயும் அனேகமாக விசாரணைக்குப் பிறகு அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன. ஆனால் கோவை மாவட்டத்திலே இன்னும் சுமார் 45,000 மனுக்கள்மீது அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் இந்த மாதத்திற்குள் கொடுத்து முடிக்கப்பட வேண்டுமென்று அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல திருச்சி மாவட்டத்திலேயும் சுமார் 50,000 மனுக்கள் மீது அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. இந்த இரண்டு மாவட்டங்களிலே ஒரு தனித் தன்மை ஏற்பட்டிருக்கிறது. என்னவென்றால், அதிலேயும் குறிப்பாக கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிற திருப்பூர், கோவை பகுதிகளில் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையில் புதிய புதிய மனுக்களைக்

கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மனுக்களைக் கொடுக்கிறபோது அதிலே எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்றும் சொல்ல முடியவில்லை. இன்றைக்கு அரசாங்கத்திற்கு இருக்கிற மிகப் பெரிய கவலை எல்லாம், 1991 மக்கள்தொகை கணக்கின்படி தமிழ்நாட்டிலே இருக்கிற குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் ஒரு கோடியே இருபத்திநான்கு லட்சம்தான்; அதற்குப் பிறகு 2 ஆண்டுகள், 3 ஆண்டுகளிலே அது உயர்ந்திருக்குமானால் அதிகபட்சமாக ஒரு கோடியே முப்பது இலட்சம் வந்திருக்கலாம். ஆனால் ஒரு கோடியே ஐம்பது லட்சம் அட்டைகள் கொடுத்ததற்குப் பிறகும் ஒரு இலட்சம் திருச்சியிலும், கோவையிலும் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில், இன்றும் விண்ணப்பங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்கே தவறு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதில் அருள்கூர்ந்து அரசாங்கத்தோடு சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைத்து, உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், நான் முன்னாலே சொன்னதுபோல் அரசாங்கத்திற்கு இதிலே பொறுப்பு வருகிறது. நாம் அரிசி கொடுத்தாக வேண்டும். அரிசியை அதிக விலை கொடுத்து வாங்கி, கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சர்க்கரை கொடுக்க வேண்டும். அது நம்மிடத்தில் இல்லை. மத்திய அரசிடம் கேட்டால் நாங்கள் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாகப் பதில் அளித்திருக்கிறார்கள். மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டும். மண்ணெண்ணெய் இறக்குமதி செய்தாக வேண்டிய பொருள், ஆகவே கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். இவை எல்லாவற்றையும்விட, இந்தக் குடும்ப அட்டைகளை வைத்துக்கொண்டு வேறு தவறானவர்கள் தவறானவற்றுக்கு சட்டபூர்வமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கும் இதிலே வழி இருக்கிறது என்பதையும் அருள்கூர்ந்து மறந்துவிடக் கூடாது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கோவை மாவட்டத்திலே இந்தப் பிரச்சினை மேலெழுந்து நிற்கிறது. அதை விரைவிலே முடித்து, இந்த மாதத்திற்குள் வழங்கப்பட்டாக வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். 50,000—க்கு உட்பட்ட அளவிலே அங்கே வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன, இந்த மாதத்திற்குள் கொடுக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக நிலுவை இருக்கிற பகுதிகளில் எல்லாம் இந்த மாதத்திற்குள் கொடுத்து முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிற காரணத்தால் கேள்விகள் போதும் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) ஒரே கேள்விக்கு 17 நிமிடங்கள்.

வினா எண் 62, திருமதி ரெ. சியாமளா, இருக்கையில் இல்லை.

வினா எண் 63, திரு. தா. செழியன், இருக்கையில் இல்லை.